தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மார்கழி 28, திருவள்ளுவர் ஆண்டு—2053

2023 ஜனவரி 12, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்."

அறிவும், ஆற்றலும் கொண்ட ஒருவன், தன்னைச் சூழவும் அத்தகையோரையே கொண்டிருந்தால் பகைவர்களால் எந்தத் தீங்கையும் விளைவிக்க முடியாது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

11—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

***419—திரு. க. செல்வராஜ்:**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் நவீன வசதிகளுடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஜனவரி 12

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பை எனக்கு வழங்கியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருப்பூரில் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் சுமார் 8 ஏக்கர் பரப்பளவில் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த வளாகத்தில் பார்வையாளர்கள் மாடத்துடன் (Spectators Gallery) கூடிய திறந்தவெளி விளையாட்டரங்கம், உடற்பயிற்சிக் கூடம், 400 மீட்டர் தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம், டென்னிஸ், கையுந்து பந்து (Volley ball) மற்றும் கூடைப்பந்து ஆகிய விளையாட்டுகளுக்கான ஆடுகள வசதிகள் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், திருப்பூர் திறந்தவெளி விளையாட்டரங்க கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையால் 18–11–2021 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது சுமார் 60 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன. 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள், 1,500 பார்வையாளர்கள் அமரக்கூடிய மாடம் (Spectators Gallery), 400 மீட்டர் தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம் மற்றும் வாலிபால் ஆடுகளம் ஆகிய பணிகள் முடிவடைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள்.

திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கண் எனது தாய்க்கும், தலைவனுக்கும் தலைவணங்கி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காட்டிய வழியில் நல்நெறியுடன் நாடே போற்றிடும்வகையில் நடைபோடும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசில், மிகவும் பொருத்தமான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக பொறுப்பேற்ற நாள்முதல், சிறப்பாகப் பணியாற்றி வரும் தங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஜனவரி 12]

திருப்பூர் மாவட்ட மக்களின் கோரிக்கையினை ஏற்று, சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் ரூ.18 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்ட விளையாட்டு மைதானத்துடன்கூடிய திறந்தவெளி விளையாட்டரங்கம் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் எப்போது நிறைவுபெற்று பயன்பாட்டுக்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சுமார் 60 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன. 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் அனைத்துப் பணிகளும் நிறைவடையும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள்.*

திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கொண்டுவரும் அந்தப் பணிகள் நிறைவடைந்ததும், மாண்புமிகு அமைச்சராகிய தாங்கள் திறப்பு விழாவிற்கும் நேரில் வருகை தந்து, விளையாட்டரங்கத்தைத் திறந்து வைத்து, சிறப்பிக்குமாறு திருப்பூர் மக்கள் சார்பாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், தமிழ்நாட்டில் வீரம் செறிந்த விளையாட்டுகளில் ஒன்றான பாரம்பரியமிக்க கபடி போட்டிக்கான உலகக் கோப்பையை தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் அறிவித்து, உலகமே உற்றுப்பார்த்து வியக்கும் வகையில், தமிழ்நாட்டிற்கும் திராவிட மாடல் அரசிற்கும் பெருமை சேர்க்க வேண்டுமென தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க, கண்டிப்பாக நானே நேரில் வந்து அந்த விளையாட்டரங்கத்தைத் திறந்து வைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) விளையாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த ஆட்சியில், புதியதாக பொறுப்பேற்ற ஒன்றரை ஆண்டுகளில், 44-வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி கடந்த வருடம், தமிழ்நாட்டை உலகமே வியந்து பாராட்டும்வகையில் நடத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த செஸ் ஒலிம்பியாடில் சுமார் 180-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சார்ந்த 2,000-க்கும் மேற்பட்ட செஸ் விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

முற்பகல் 10-05

மேலும், தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக பெண்களுக்கான WTA சர்வதேச tennis போட்டிகள் கடந்த வருடம் சிறப்பான முறையில் நடைபெற்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, பாரம்பரிய விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், கபடி மற்றும் சிலம்பம் ஆகிய விளையாட்டுகளை உள்ளடக்கிய, தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள், மாவட்ட மற்றும் மாநில அளவில் ஜூன் மாதத்திற்குள் நடத்தி முடிக்கப்படும் என்பதை இப்பேரவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் மற்றொரு கோரிக்கையான உலகக் கோப்பை கபடி போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்துவது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஜனவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

குடியிருப்புகள்

***3152—திரு. கோ. ஐயப்பன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் தொகுதி, செம்மண்டலம் மற்றும் குண்டுசாலை ஆகிய பகுதிகளில் அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் தொகுதி செம்மண்டலம் பகுதி, குண்டுசாலையில் A, B, C *மற்றும்* D *என்ற வகையில் 416 வீடுகள் இருக்கின்றன. அவற்றில்* D *வகையைச் சார்ந்த 112 வீடுகள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றை இடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதனைத் தொடர்ந்து, அங்கே வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள்.*

திரு. கோ. ஐயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*